# இஸ்லாமிய மயமாக்கமும் பெண்களின் ஆடைக் கலாச்சாரமும்: சம்மாந்துறைப் பிரதேசத்தை மையப்படுத்திய ஓர் விஷேட ஆய்வு

M. Nusrath Banu[1] & H.M. Fathima Shahnas[2]

[1]Department of Sociology, SEUSL.
[2]Department of Arabic Language, SEUSL.
mnusrathbanu1@gmail.com, fathimashahnas.hm@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இஸ்லாமானது ஆடைக்கலாச்சாரத்தில் உடலியல் நிலைமைகளுக்கு ஏற்ப பாதுகாப்பான ஆடைமுறைகளை வழங்கிய ஒரு பூரணத்துவமான மார்க்கமாகும். பெண்களின் ஆடை விடயத்தில் கூடிய கவனம் செலுத்தியுள்ளது. அந்தவகையில் இவ்வாய்வானது, ஆய்வுப் பிரதேசத்தில் பெண்களின் தற்பொழுது காணப்படுகின்ற ஆடைக்கலாச்சாரத்தினைக் கண்டறிந்து, அதனை இஸ்லாமிய மயப்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதை நோக்காகக் கொண்டுள்ளது. இஸ்லாமிய ஆடைசார் வரையறைகளும் ஆய்வுப் பிரதேசத்தில் காணப்படுகின்ற பெண்களின் ஆடைக்கலாச்சாரமும் குறிப்பிடத்தக்களவு ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகின்ற நிலைமையிலே காணப்படுகின்றது. எனினும் அந்நிய கலாச்சாரத் தாக்கம், ஆடைநாகரீக மோகம் என்பவற்றின் காரணத்தினால் ஆடைகள் இஸ்லாமிய வரையறையினின்றும் சற்று எல்லை மீறுவதனைக் காணலாம். இந்நிலைமையானது இஸ்லாத்தை பின்பற்றி ஒழுகும் மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் மக்களிடையே கருத்து வேறுபாடுகளும் பிழையான கண்ணோட்டங்களும் ஒருவரையொருவர் சாடுவதும் முதலிய அசௌகரீக நிலைகள் சமூக அரங்கில் ஒரு பிரச்சினையை தோற்றுவிக்கின்றன. எனவே, இவ்வாய்வினைப் பூர்த்தி செய்வதற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்காக 100 கட்டமைக்கப்படாத நேர்காணல்களும் நேரடி அவதானிப்பு முறையும் 02 இலக்குக்குழு கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத்தரவுகளாக இஸ்லாத்தின் மூலாதாரமான அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் முதலியன பயன்படுத்தப்பட்டன. இவ்வாறாக இவ்வாய்வானது ஆய்வுப்பிரதேசப் பெண்களின் தற்போதைய ஆடைக்கலாச்சாரத்தை நான்கு பிரிவுகளுக்குட்படுத்தி ஆய்வு செய்வதோடு அதன் பெரும்பாலானவை இஸ்லாமியமயமாக்கத்தின் பால் தேவையுடையனவாக இனங்காணப்பட்டுள்ளன. அதேவேளை இப்பிரதேசப் பெண்களின் ஆடைக்கலாச்சாரத்தை இஸ்லாமிய மயப்படுத்துவதற்காக, சிறுவயதிலிருந்தே இஸ்லாமியச் சூழலில் பெண்பிள்ளைகளை வளர்த்தல், பெண்களுக்கு தங்களது ஆடை பற்றிய இஸ்லாமிய வரையறைகளை தெளிவுபடுத்தல், முஸ்லிம் மகளிர்க்கு பொருத்தமான தளர்வான ஆடைகளை வடிவமைத்து சந்தைப்படுத்தக்கூடிய தொழில் முனைவர்களை உருவாக்கல் போன்றன பரிந்துரைகளாக முன்வைக்கப்பட்டுள்ளன.

**திறவுச் சொற்கள்:** ஆடைக்கலாச்சாரம், நாகரீக மோகம், பண்பாட்டுமயமாக்கம், இஸ்லாமியமயமாக்கம், இஸ்லாமிய வழிகாட்டுதல்.

## அறிமுகம் (Introduction)

இஸ்லாம் மார்க்கமானது உலக மக்கள் அனைவரையும் நெறிப்படுத்த வந்த பூரணத்துமிக்க ஒரு மார்க்கமாகும். இஸ்லாத்திற்குட்பட்டு மனிதனால் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து விடயங்களையும் இபாதத்தாகவே கருதுகின்றது. இதனடிப்படையில் ஒவ்வொரு விடயத்திற்கும் வழிகாட்டுகின்ற இம்மார்க்கம் மனிதனுடைய ஆடை விடயத்திலும் விஷேட கவனம் செலுத்துகின்றது. உண்மையில் ஆடை அல்லாஹ்வின் மிகப் பெரிய அருட்கொடையாகும். ஆடை மட்டும் இல்லாமல் இருந்தால் மனிதனுக்கும் மிருகங்களுக்கும் வித்தியாசமின்றி போயிருக்கும். “ ஆதமுடைய மக்களே! நிச்சயமாக நாம் உங்களுடைய மானத்தை மறைக்கக் கூடிய ஆடையையும், அலங்கார ஆடைகளையும் உங்களுக்கு அருள் புரிந்திருக்கின்றோம்.’’ (அல்குர்ஆன் 7: 26 )

மனிதன் அவன் அணியும் ஆடைகளை வைத்தே அவனை தரம்பிரித்து விட முடியும். ஏனெனில் ஆடை என்பது வெறும் துணி மட்டுமல்ல. மாறாக, ஒழுக்கங்களில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. எனவே ஆடைக்கலாச்சாரம் என்பது நாட்டுக்கு நாடு, பிரதேசத்துக்கு பிரதேசம், நிகழ்வுகளுக்கு நிகழ்வு வேறுபடுகின்றது.

அந்தவகையில் இஸ்லாமிய ஆடையானது மரபு ரீதியான ஆடை மற்றும் நவீனத்துவ ஆடை என வரையறுக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில் 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பில் ஏற்படுத்தப்பட்டிருந்த திறந்த பொருளாதாரக் கொள்கையின் மூலம் இலங்கையிலிருந்து முஸ்லிம் நாடுகளான மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலை வாய்ப்புகளுக்குச் சென்றவர்களின் மூலம் இலங்கைக்கு அபாயா மற்றும் ஹிஜாப் போன்ற இஸ்லாமிய ஆடைகள் அறிமுகப்படுத்தப்பட்டது. இவை இஸ்லாமிய பெண்களுக்கு பாதுகாப்பை ஏற்படுத்தக் கூடியதாகவும் மார்க்கத்தை விட்டு விலகாமல் இஸ்லாமிய உணர்வை மேம்படுத்தக்கூடிய ஒன்றாகவும் உள்ளது.

இன்று உலகலாவிய ரீதியில் ஆடைக்கலாச்சாரமானது பல வகையான வடிவங்களைப் பெற்றுக் காணப்படுகின்றது. அவைகளில் டொப், சல்வார் வகைகள், அபாயா, சாரி வகைகள், சில்ம் பிற் ஜீன்ஸ், லெஹென்கா, ப்ரொக்ஸ் போன்ற பல வகையான ஆடைவகைகள் பல்வேறுபட்ட வித்தியாசமான சந்தர்ப்பங்களுக்கும் நிகழ்வுகளுக்கும் ஏற்ப அணியப்படுகின்றன. இவைகளில் அனேகமானவை மேற்கத்திய ஆடைவகைகளாகவும், பிறமத கலாச்சார ஊடுருவல்களை உள்ளடக்கியதாகவும், கவர்ச்சியான வடிவங்களைக் கொண்டும் காணப்படுகின்றன.

இந்த ஆடைவகைகளில் ஹிஜாப் மற்றும் அபாயா போன்ற ஆடைகள் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து ஏனைய நாடுகளுக்கு பரவியுள்ளது. அந்த வகையிலேயே தான் இலங்கையிலும் இவ் ஆடைகளின் தாக்கமானது காணப்படுகின்றது. இதற்கு காரணமாக வேலைவாய்ப்புக்காகச் சென்றமை, வியாபாரம் மற்றும் சுற்றுலா போன்ற காரணங்களின் மூலமாக இவ் ஆடைக்கலாச்சாரமானது இலங்கை முஸ்லிம் பெண்கள் மத்தியில் பரவியுள்ளது. இவ்வாறு பரவிய ஆடைக்கராச்சாரமானது இன்றைய காலத்தில் மிகவும் மோசமான ஒரு நிலையில் உள்ளது. எவ்வாறாயின் தங்களினுடைய அவ்ரத்துக்களை பிற ஆடவர்கள் இலகுவாக கண்டுகொள்ளும் அளவிற்கு அதில் மாற்றங்களை கொண்டுள்ளனர்.

அந்த வகையிலேயே தான் இலங்கையில் அதிகளவு முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை பிரதேசத்தினை மையமாகக் கொண்ட இவ்வாய்வுப்பிரதேசத்திலுள்ள முஸ்லிம் பெண்களின் நிலையும் இவ்வாறாக சீரழிந்து கொண்டுவருகின்றது. இவற்றினை சீர்செய்யும் நோக்கில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது.

பின்வரும் ஹதீஸ் சான்றுபகிர்வதாவது: ஒரு முறை அஸ்மா பின்த் அபீபக்கர் (ரழி) அவர்கள் ஒரு மெல்லிய ஆடை அணிந்து ரஸூலுல்லாஹ்விடம் வந்திருந்தார்கள். இதைக் கண்ட நபியவர்கள் உடன் தனது திருமுகத்தை திருப்பிக்கொண்டு பின்வருமாறு கூறினார்கள்: ‘அஸ்மாவே! ஒரு பெண் பருவமடைந்துவிட்டால் அவளின் உடலில் இதனையும், இதனையும் தவிர வேறு எப்பகுதியும் வெளியே தெரியலாகாது’ என்று கூறி தனது முகத்தையும் இரு கரங்களையும் காண்பித்தார்கள். (அபூதாவூத்) இவ்வாறாக ஒவ்வொரு முஸ்லிம் பெண்ணின் மீதும் அமுல்படுத்தப்பட்டுள்ள மாற்ற முடியாத சட்டங்களில் ஒன்று அவள் எங்கு வாழ்ந்தாலும், அவள் தன் முகத்தையும் மற்றும் கரங்களையும் தவிர தனது முழு உடலையும் மறைக்க வேண்டும் என்பதாகும்.

அந்தவகையில் பெண்களின் முகம், இருகரம் தவிர்ந்த அனைத்தும் அவ்ரத் என்பதை இஸ்லாம் கூறுகின்றது. இன்னும் இவற்றை மறைக்கச் சொல்லி இஸ்லாம் பல இடங்களில் கூறுகின்றது. அவைகளில் பெண்களின் ஆடை அலங்காரமானது ஆண்களைக் கவரக்கூடிய வகையில் அமையக் கூடாது என்றும் அந்நிய ஆடவர்களின் பார்வைக்குட்படாத வண்ணம் இருத்தல் வேண்டும் என்பதையும் வலியுறித்தியுள்ளது.

இவ்வாறெல்லாம் இஸ்லாமிய கட்டுக் கோப்புக்குள் பெண்களை வரையறுத்த இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரமானது தற்காலத்தில் பல பரிணாமங்களைப் பெற்று மேற்கத்தேய கலாச்சாரத்தை உள்ளடக்கி, இஸ்லாமிய சட்டதிட்டங்களை மீறுகின்ற வகையில் காணப்படுகின்றது.

### ஆய்வுப் பிரச்சினை (Research Problem)

இஸ்லாமிய ஆடைசார் வரையறைகளும் ஆய்வுப்பிரதேசத்தில் காணப்படுகின்ற பெண்களின் ஆடைக்கலாச்சாரமும் குறிப்பிடத்தக்களவு ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகின்ற நிலைமையிலேயே காணப்படுகின்றது. எனினும் அந்நிய கலாச்சாரத்தாக்கம், ஆடை நாகரீக மோகம் என்பவற்றின் காரணத்தினால் ஆடைகள் இஸ்லாமிய வரையறையினின்றும் சற்று எல்லை மீறுவதனைக் காணலாம். இந்நிலைமையானது இஸ்லாத்தை பின்பற்றி ஒழுகும் மக்கள் வாழும் இப்பிரதேசத்தில் மக்களிடையே கருத்து வேறுபாடுகளும் பிழையான கண்ணோட்டங்களும் ஒருவரையொருவர் சாடுவதும் முதலிய அசௌகரீக நிலைகள் சமூக அரங்கில் ஒரு பிரச்சினையை தோற்றுவிக்கின்றன. எனவே, இதுவே ஆய்வினது பிரச்சினையாகும்.

### ஆய்வு நோக்கம் ( Research Objective )

ஆய்வுப் பிரதேசத்தில் பெண்களின் தற்பொழுது காணப்படுகின்ற ஆடைக்கலாச்சாரத்தினைக் கண்டறிந்து, அதனை இஸ்லாமியமயப்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதே இவ்வாய்வினுடைய நோக்கமாகும்.

### ஆய்வு முறையியல் ( Research Methodology )

இவ்வாய்வினை பூர்த்தி செய்வதற்காக முதலாம், இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளை பெற்றுக்கொள்வதற்காக 100 கட்டமைக்கப்படாத நேர்காணல்களும் ஆய்வுப் பிரதேசத்துக்குச் சென்று நேரடி அவதானிப்பு முறையும் மற்றும் 02 இலக்குக் கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன. இலக்குக்குழு கலந்துரையாடலில் மார்க்க அறிஞர்கள், ஆடைக்கடை உரிமையாளர்கள், சமூக நலன்விரும்பிகள், சமூகவியலாளர்கள் மற்றும் சன்மார்க்க அறிஞர்கள் போன்றோரிடம் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடலகள் மூலம் தரவுகள் பெறப்பட்டன.

இரண்டாம் நிலைத்தரவுகளாக இஸ்லாமிய மூலாதாரமான அல்குர்ஆன், ஹதீஸ் மற்றும் இஸ்லாமிய நூல்கள், சஞ்சிகைகள், இணையக் கட்டுரைகள், ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் முதலியன பயன்படுத்தப்பட்டுள்ளன.

### ஆய்வுப் பிரதேசம் ( Research Area )

இலங்கை கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற மட்டக்களப்புத் தரவை என ஆரம்பத்திலும் 1700ற்குப் பிறகு சம்மாந்துறை எனவும் பிரபல்யமடைந்த, முழு இலங்கை தீவிலும் முஸ்லிம்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பழம் பெரும் பிரதேசமே சம்மாந்துறையாகும். அம்பாறை மாவட்டத்தில் 20 பிரதேச செயலகப்பிரிவுகளில் ஒன்றான சம்மாந்துறை மிகக் கூடுதலான மக்கள் தொகையையும் அதிக நிலப்பரப்பையும் உள்ளடக்கியதாகும். சம்மாந்துறை தனியான ஒரு பிரதேச செயலகமாக தற்போது 51 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கி 21 கிராமங்களுடன் 132.79 சதுரகிலோமீற்றர் பரப்பை எல்லையாகக் கொண்டு அமைந்துள்ளது. சம்மாந்துறை பிரதேசமானது 7 பாகை 22 கலை வடக்கு 81 பாகை 48 கலையுடன் வங்களா விரிகுடாவிலிருந்து 4.8 km தூரத்தில் அமைந்துள்ளது. இங்கு 484 குடும்பங்களும் 64696 மொத்த சனத்தொகையும் காணப்படுகின்றது. இப்பழம் பெரும்பகுதி வடக்குத் தெற்காக நீண்டு, பரந்து காணப்படும் மட்டக்களப்பு வாவியின் தென் கோடியில் “ அல்லை ” என அழைக்கப்படும் சதுப்பு நிலத்தையும் சேவகப்பற்று என்றழைக்கப்படும் வயற்காணிகளையும் வட எல்லையாகக் கொண்டமைந்து காணப்படுகின்றது. மேலும் கிழக்கில் வயல் வெளிகளும் மாவடிப்பள்ளிக் கிராமமும் மேற்குப் பகுதியில் வீரமுனைக் கிராமமும் தெற்கில் கருவாட்டுக்கல் பகுதிகளையும் பரப்பெல்லையாகக் கொண்டுள்ளது. 1950ம் ஆண்டுக்கு முன்

சனத்தொகையில் பெரும்பான்மையாக முஸ்லிம்கள் 88 சதவீதமும் தமிழ் மக்கள் 12 சதவீதமும் வாழ்ந்து வந்துள்ளனர். ஆனால் தற்போது முஸ்லிம்கள், தமிழர்கள் உட்பட பறங்கியரும் சிங்களவர்களும் குறிப்பிட்ட சதவீதத்தில் வாழ்கின்றனர். இப்பிரதேசத்தில் வாழும் மக்கள் தங்களது பிரதான ஜீவனோபாயமாக விவசாயத்தை கொண்டிருக்கின்றனர். அவ்வாறே இன்னும் சில மக்கள் தங்களது கல்வித்தகைமைக்கேற்ப அரசாங்கத் தொழில்களிலும் மற்றும் கைத்தொழில், வர்த்தகம் முதலானவற்றிலும் ஈடுபடுகின்றனர்.

**கலந்துரையாடல்களும் பெறுபேறுகளும் ( Results & Discussion )**

பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் சம்மாந்துறைப்பிரதேசத்தின் ஆடைக்கலாச்சாரத்தை நான்கு பிரிவுகளுக்குட்படுத்தி நோக்க முடியும்.

1. வீடுகளில் அணியும் ஆடைக்கலாச்சாரம்
2. திருமணங்களின் போதான ஆடைககலாச்சாரம்
3. வெளியில் செல்லும் போது அணியும் ஆடைக்கலாச்சாரம்.
4. மரண வீடு, துக்க நிகழ்வுகளின் போதான ஆடைக்கலாச்சாரம் போன்றனவாகும்.

**1. வீட்டில் அணியும் ஆடைககலாச்சாரம் :**

எமது ஆய்வுப் பிரதேசத்தில் வசிக்கும் பெண்களின் தினசரி வீட்டில் அணியும் ஆடைகள் அதாவது சம்பிரதாயப்படி அல்லாத ஆடைகள்(Informal wears) எளிய வடிவமைப்புகளுடன் மற்றும் அதிக நாள் பாவனைக்குட்படுத்தக்கூடியதாகவுமே காணப்படுகின்றன. அவைகளில் சல்வார்(Shalwar),சிலிம் பிட் ஜீன்ஸ்(Legeans), பளாஷோ(Plazo), பாவாடை(Skirt),பெனபம்ஸ் (House coat), மற்றும் டொப்ஸ் (Top) போன்ற ஆடைகள் அதிகம் அணிவதாக இனங்காணப்பட்டுள்ளன. இஸ்லாத்தின் பார்வையில், பெண்கள் தங்களது வீடுகளில் தங்களது விருப்பத்திற்கேற்ப கவர்ச்சியான ஆடைகளை அணிய அனுமதி வழங்கியுள்ளது.

**1.1 சல்வார் :-**

இவ் ஆய்வுப் பிரதேச பெண்கள் விரும்பி அணியும் ஆடைகளில் ஒன்றே சல்வாராகும். இது பெண்கள் அணிவதற்கு ஏதுவான ஒரு ஆடை வகையாகும். இப் பிரதேசப் பெண்கள் ஸ்ரீஜி, டீப்டெக்ஸ், கொட்டன், விஸ்கோஸ் போன்றவகை சல்வார்களையே அதிகம் வீடுகளில் அணிகின்றனர். அநேகமாக இவ்வகை சல்வார்கள் மார்க்க வரையறைகளை பேணிய வண்ணமே தைக்கப்படுகின்றன. இவ்வாறே சில காலங்களுக்கு முன் பாகிஸ்தான் எனும் சல்வார் துணியும் பாவனையில் இருந்தது.

1.2 **சில்ம் பிற் ஜீன்ஸ்** :-

எமது ஆய்வுப் பிரதேசத்தில் அதிகமான பெண்கள் இவ்வகை காற்சட்டையை விரும்பி அணிகின்றனர். இது “ தோல் இறுக்கமான காற்சட்டை” எனும் பெயராலும் அழைக்கப்படுகின்றது. இது கால்ளுடன் ஒட்டியதாகவும், கால்களின் அமைப்பை தெளிவாகக் காட்டக்கூடியதாகவும் உள்ளது. இஸ்லாம் இவ்வாறான ஒட்டிய ஆடைகளை வீடுகளில் அணிய அனுமதித்தாலும் கூட வெளியில் செல்லும் போது இவற்றை அணிவதைத் தவிர்ந்திருக்கச் செய்வதே இஸ்லாத்தின் வரையறையாகும். இவ்வாறாக இறுக்கமான ஜீன்ஸ்கள் அணிவதால் தொடைத்தசை, தோல் பாதிப்பு மற்றும் கால் நரம்புகளின் இரத்த ஓட்டம் தடைப்படல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படுவதாக விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டுள்ளன.

**1.3 பலாஸோ :-**

எமது ஆய்வுப் பிரதேசத்தில் பெண்கள் வீட்டில் அணியும் ஆடைகளில் இதுவும் ஒன்றே. இது சுலபமாக அணியக் கூடியதாகவும், எந்த வித மேல்சட்டைக்கும் ஏற்றதாகவும், தளர்வானதாகவும் மற்றும் பல பெண்களின் விருப்பத்துக்குரிய காற்சட்டையாகவும் இவ்வாய்வுப் பிரதேசத்தில் இனங்காணப்பட்டுள்ளது.

### 1.4 ஹவுஸ்கோட் :-

எமது ஆய்வுப் பிரதேசத்தில் பெண்கள் வீட்டில் அணியும் சௌகரிகமான ஆடைகளில் ஒன்றுே இது. இவ்வாடையானது நீண்டதாகவும், தளர்வானதாகவும், இலகுவாகவும் அணியக் கூடிய முறைசாரா ஆடைகளில் ஒன்றாக இனங்காணப்பட்டுள்ளது. இது இஸ்லாமிய வரையறைகளை உள்ளடக்கிய அதிகளவு ஆயுள் கொண்ட ஆடையாகவும் காணப்படுகின்றது.

### 1.5 டொப் :-

எமது ஆய்வுப் பிரதேசத்தின் ஆடைக்கலாச்சாரத்தில் புரட்சி கண்ட ஆடைகளில் ஒன்றே டொப்கள். இவை பலவகையான துணிகளிலும் பல்வேறுபட்ட வடிவமைப்புக்களிலும் தைக்கப்பட்டுள்ளன. இவற்றில் சில அரைகுறையாகவும் இன்னும் சில ஆண்களது ஆடைகளை ஒத்தவையாகவும் மற்றும் ஆடம்பரமாகவும் அன்னிய கலாச்சாரத்தை அண்டியதாகவும் இறுக்கமான, மெல்லிய அமைப்பையும் கொண்டு இம்மாடஸ்டி கோட்பாட்டையும் புலப்படுத்துகின்றன. இதற்கும் மாற்றமாக, இன்னும் சில வகை டொப்கள் இப்பிரதேசத்தில் இஸ்லாமிய வரையறைக்குட்பட்டதாகவும் காணப்படுகின்றன. டொப்கள் அறிமுகமான ஆரம்பநாட்களில் சாதாரண விலைகளில் விற்கப்பட்டாலும், தற்போது மிக உயர்ந்த விலைகளில், அதாவது 800 – 3000 வரையான விலைகளில் டொப்கள் மாத்திரம் விற்கப்படுகின்றன. அதுமட்டுமல்லாது இவைகளுக்கு பொருத்தமான காற்சட்டை, சோல்களை வேறாக தெரிவு செய்ய வேண்டிய தேவையும் உள்ளது. இவ்வாறு அதிகம் பணம் கொடுத்து வாங்கும் ஆடைகள் முழுமையானதாக இருந்தால் பரவாயில்லை. ஆனால், இந்த ஆடைகள் கீழிருந்து மேல் வரை திறந்திருக்கும் அமைப்பைக் கொண்டவை. இன்னும் ஒரு பெண் அமரும் போது மறைக்கப்பட வேண்டிய உறுப்புக்கள் வெளியே தெரியக் கூடியவாறும் காணப்படுகின்றன. எனவே இத்தகைய ஆடைகளை அணிவது காபிர்களுக்கு ஒப்பானதாகவும் அவர்களின் கலாச்சாரத்திலும் அவர்கள் உருவாக்கிய அநாகரீகத்திலும் அவர்களைப் பின்பற்றுவதாகவும் அமைகின்றது. "யார் பிரிதோர் சமூகத்துக்கு ஒப்பாக நடக்கின்றாரோ, அவர் அந்த சமூகத்தை சார்ந்தவராவார்." என நபி ( ஸல் ) அவர்கள் கூறியுள்ளார்கள்.

மேற்குறிப்பிட்ட ஆடை அமைப்புக்கள் எமது ஆய்வுப் பிரதேசத்தில், அதிகமான பெண்கள் வீடுகளில் அணியும் ஆடைக்கலாச்சாரங்களாக இனங்காணப்பட்டவையாகும். இவைகளை வீடுகளில் தங்களது விருப்பத்திற்கேற்ப அணிய அனுமதி வழங்கிய இஸ்லாம், வெளியில் செல்லும் போது இஸ்லாமிய வரையறைகளைப் பேணியதாக இருக்க வேண்டும் எனவும் கட்டளையிட்டள்ளது.

## 2. திருமணங்களின் போதான ஆடைக்கலாச்சாரம் :

திருமணம் என்பது நபிமார்களும் ரஸூல்மார்களும் பின்பற்றிய சுன்னத்தான வழிமுறைகளில் ஒன்றாகும். அவ்வாறே திருமணம் என்பது மனித வாழ்விலும் இன்றியமையாத ஒன்றாகும். ஆனால் இன்று, திருமணம் என்பது பாரியதொரு சிக்கலாக மாறியுள்ளது. அதிகமான குடும்பங்கள் ஆடம்பரமான மேற்கத்தேய கலாச்சாரங்களினால் இஸ்லாத்தினதும் அதனது கண்ணியமான போதனைகளிலிருந்தும் வெளியேறி, தாங்களே சில சிக்கலான முடிச்சுக்களையிட்டு திருமணத்தை நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டுள்ளனர். அந்த வகையில் எமது ஆய்வுப் பிரதேசத்திலும் திருமணத்தின் போதான ஆடைக்கலாச்சாரம் பாரிய மாற்றத்தைக் கண்டுள்ளது. ஆரம்ப காலங்களில் திருமணத்தின் போது சேலையை மட்டுமே அனைவரும் விரும்பி அணியக்கூடியோராக இருந்தனர். ஆனால் இன்று, திருமணத்திற்கென்று பல்லாயிரக்கணக்கான பணத்தைக் கொடுத்து இஸ்லாமிய வரையறைகளைத் தாண்டிய ஆடைகளையே வாங்குகின்றனர். இவ்வாறாக, அல்லாஹ்வின் கோபத்தை பெற்றவர்களாகவே தங்களது வாழ்க்கையை ஆரம்பிக்கின்றனர். " உண்ணுங்கள்! பருகுங்கள்! வீண்விரயம் செய்யாதீர்கள்!வீண்விரயம் செய்வோரை அவன் விரும்பமாட்டான்". ( அல்குர்ஆன் 7:31 ). அந்த வகையில் எமது ஆய்வுப் பிரதேசத்தில்

திருமணத்தின் போது லெஹென்கா, சாரி, ஷகாராஸ் ( சல்வாரின் ஒரு வகை ) போன்ற ஆடைகள் அதிகம் அணிவதாக இனங்காணப்பட்டுள்ளது.

### 2.1 லெஹென்கா :-

எமது ஆய்வுப் பிரதேசத்தில், அதிக இளம் பெண்களைக் கவர்ந்த மற்றும் திருமண நிகழ்வுகளின் போது அதிகம் முக்கியத்துவம் கொடுக்கும் ஆடைகளில் இதுவும் ஒன்றாகும். இது பல்வேறு நிறங்களிலும் பல்வேறு அமைப்புக்களிலும் அணியப்படுகின்றது. லெஹென்கா எனும் இவ்வகை ஆடையானது மிகவும் விலையுயர்ந்த, அதிக கலை வேலைப்பாடுகள் நிறைந்த ஆடையாகும். இன்னும் இது அன்னிய கலாச்சார மக்களின் ஆடைக்கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றது. எமது பிரதேச மக்கள் இவ்வாறு விலையுயர்ந்த ஆடைகளை தங்களது குடும்ப பொருளாதார நிலையைக் கருத்திற்கொள்ளாது எந்த திட்டமிடலும் இன்றி, நாகரீகத்திற்காகவும் பெருமைக்காகவும் வாங்குகின்றனர். இன்னும் திருமணத்திற்குப் பின் அணிய முடியாது அலுமாரிகளில் அடுக்கி விடுகின்றனர். இஸ்லாம் எல்லாவற்றிலும் எளிமையையே விரும்புகின்றது. இன்னும் எளிமையான திருமணத்திலே அபிவிருத்தி இருப்பதாகவும் கூறுகின்றது. “ ஹழ்ரத் முஆத் இப்னு அனஸ் ( ரழி ) அவர்கள் தனது தந்தை கூறியதை கூறினார்கள்: “ யார் வசதியிருந்தும் அல்லாஹ்விற்காக பணிவாக இருக்க வேண்டும் என்று ( பெருமையான பகட்டான) ஆடைகளை அணிவதை தவிர்த்துக் கொள்கிறாரோ மறுமை நாளில் இறைவன் அனைத்துப் படைப்பினங்கள் முன்னிலையில் அவரை அழைத்து அவர் விரும்பும் ஆடையை அவருக்கு அணிவிப்பான்.” என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். ( நூல் : திர்மிதி )

### 2.2 சேலை :-

இந்தியாவினால் எமக்கு வழங்கப்பட்ட ஒரு பாரம்பரிய ஆடையாக சேலைகள் காணப்படுகின்றன. இலங்கையில் சேலையானது மிக நீண்ட கால வரலாற்றைக் கொண்டுள்ளது. இது இந்தியர்களால் எமது நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட கலாச்சாரமே. இது நேபாளம், வங்களாதேசம், பாகிஸ்தான் மற்றும் இலங்கைப் பெண்களினது நிரந்தரப்பாவனையாகவும் உள்ளது. அந்தவகையில் இவ் ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பெண்கள், இந்த நவீன காலத்தின் நாகரீக முறைக்கேற்ப சேலைகளைப் பயன்படுத்திக் கொள்வதை காணக்கூடியதாக உள்ளது. அவ்வாறே சேலையின் முந்தானையால் அல்லது ஸ்கார்ப், சோல்களால் தங்களது தலையை மூடி தங்களது கலாச்சாரத்தை பாதுகாப்பதையும் காணக்கூடியதாக உள்ளது.

### 2.3 ஷகாராஸ் :-

இது பாகிஸ்தானிய வகை சல்வார்களில் ஒன்றாகும். இதன் காற்சட்டையானது (பேன்ட்) பாவாடையின் அமைப்பை ஒத்தது. அதாவது இரு கால் பகுதியில் வண்ணப்பட்டை வைத்து தைக்கப்பட்டிருக்கும். இது அதிக வண்ணமயமான ஆடை என்பதால், இவ் ஆய்வுப் பிரதேச பெண்கள் இவ்வாறான சிறப்பு மிகு விழாக்களுக்கு இவ்வகையான சல்வாரை விரும்பி அணிகின்றனர். இவ்வகையான சல்வார்கள் தூரத்தில் இருந்து பார்க்கும் போது பாவாடை போன்று தோன்றும் அருகில் பார்த்தால் தான் அது சல்வார் என்பது தெரியும். இவை இறுக்கமில்லாது, தளர்வாக இருந்தாலும் கூட, பகட்டு நிறைந்ததாகக் காணப்படுகின்றன. “ யார் இந்த உலகில் பிரபல்யமான (பகட்டான) ஆடையை அணிகின்றாரோ, மறுமையில் இறைவன் அவருக்கு இழிவின் ஆடையை அணிவிப்பான்”. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: அஹ்மத்) இன்னும் இவ்வகை ஆடைகள் அன்னிய கலாச்சாரத்தையே பிரதிபலிக்கின்றன.

### 2.4 ப்ரொக் :-

இன்றை காலத்தில், எமது ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பெண்கள் திருமண வைபவங்களின் போது அணியும் நாகரீக உடைகளில் ப்ரொக்களும் ஒரு

வகையே. இவ்வகை ஆடைகள் நீளமான அமைப்பைக் கொண்டு காணப்பட்டாலும் கூட, இவ்வுடைகள் இறுக்கமாகவும் உடலுடன் ஒட்டியதாகவும் காணப்படுவது, பெண்ணுக்குரிய இஸ்லாமிய உடையின் நோக்கத்தை பாழ்படுத்துகின்றது. இன்னும் இவ்வாடையானது அதனது நிறத்திலும் கூட கிறிஸ்தவப் பெண்களின் ஆடைக் கலாச்சாரத்தையே ஒத்துக் காணப்படுகின்றது. அப்துல்லாஹ் இப்னு அம்ர் (ரழி) அவர்கள் கூறினார்கள், " நான் மஞ்சள் நிறத்திலான இரு ஆடைகளை அணிந்திருப்பதைக் கண்ட நபி (ஸல்) அவர்கள், இவை காபிர்களுடைய ஆடைகள், எனவே இவற்றை அணியாதீர்!" என்றார்கள். (முஸ்லிம்)

இவ்வாறாக, மேற்குறிப்பிட்ட ஆடைவகைகள் எமது ஆய்வுக்குட்பட்ட பிரதேச பெண்கள் சமூகத்தில் புகழ், பிரபல்யத்தை நாடியும் காலத்திற்கு காலம் வரும் நவீன வடிவமைப்புக்களில் ஆடை அணிய வேண்டும் எனும் நோக்கிலும், திருமண வைபவங்களின் போது அணியும் ஆடைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

## 3. வெளியில் செல்லும் போது அணியும் ஆடைகள் :-

எமது ஆய்வுப் பிரதேசத்தில் வெளியில் செல்லும் பெண்களின் வீதம் அதிகமாகவே காணப்படுகின்றது. அவர்களில் வேலைக்குச் செல்லல், பல்கலைக்கழகம் மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்குக் கற்பதற்காகச் செல்லல், மாலை நேர வகுப்புக்களுக்காகச் செல்லல் போன்ற பல காரணங்களுக்காகவும், தங்களது அத்தியவசிய தேவைகளை அடைந்து கொள்வதற்காகவும் வெளியில் செல்வதாக இனங்காணப்பட்டுள்ளது. அந்த வகையில் எமது ஆய்வுப் பிரதேசத்தில் வெளியே செல்லும் பெண்கள் அதிகமாக அபாயாக்கள் மற்றும் சேலைகளை அணிவதை காணக்கூடியதாக உள்ளது. அதிலும் இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலானோர் சாரிகளை அணிவதை விட அபாயாக்களையே அணிகின்றனர்.

### 3.1 சாரிகள் :-

தற்போது எமது ஆய்வுப் பிரதேசத்தில், வெளியில் செல்லும் பெண்களில் சேலை அணிவோர் காலம் காலமாக சேலை அணியும் சில நடுத்தர வயதான பெண்கள் மட்டுமே. அவர்கள் வெளியில் செல்லும் போது இஸ்லாமிய வரையறைக்குட்பட்ட எளிமையான, நேர்த்தியான சேலைகளையும் இன்னும் இஸ்லாமிய வரையறைப்படி மறைக்க வேண்டிய உறுப்புக்களை மறைத்தும் கவர்ச்சியற்ற தன்மையிலும் தங்களது ஆடைகளை கட்டுக்கோப்பான முறையில் அணிவதை இனங்காணக்கூடியதாக உள்ளது. இன்னும் தங்களது சேலைக்கேற்ற ஸ்கார்ப்கள் மூலம் தங்களது தலைமுடிகளையும் மறைத்து, தங்களது கலாச்சாரத்தையும் பாதுகாக்கக்கூடியோராய் தங்களது ஆடைக்கலாச்சாரத்தினை அமைத்துக் கொண்டுள்ளனர். இன்றைய காலகட்டத்தில் இவ்வாடைக் கலாச்சாரமானது இவ்வாய்வுப் பிரதேசத்தில் இஸ்லாமிய ஆடையான அபாயாவை விடவும் மெச்சத்தக்கதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

### 3.2 ஹபாயாக்கள் :-

கடந்த 20 ஆண்டுகால இடைவெளியில் இலங்கை முஸ்லிம்களின் குறிப்பாக, முஸ்லிம் பெண்களின் ஆடை அமைப்பு புரட்சிகரமான மாற்றங்களை உள்வாங்கி வந்திருக்கின்றது. இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் புனித மக்காவுக்கு ஹஜ் யாத்திரை சென்று வந்த பெண்கள் மாத்திரமே பர்தா அணியும் வழக்கம் கொண்டிருந்தனர். 1990 களுக்கு முன்னர் இவ்வாறான ஒரு நிலையே காணப்பட்டது. இன்று முஸ்லிம் பெண்களின் ஆடை பர்தா, நிகாப், அபாயா என பல்வேறு பரிணாமங்களைப் பெற்றுள்ளது. உலகளவில் ஏற்பட்ட இஸ்லாமிய எழுச்சியின் அடையாளமாகவே இவை பார்க்கப்படுகின்றன.

உள்ளூர் சமூகத்திற்கு அரபு இஸ்லாமிய நாடுகளுடன் ஏற்பட்ட உறவுகளும் இதற்குப் பிண்ணனியில் உள்ளன. தொழில் வாய்புக்காக வெளிநாடு சென்றோர்

மற்றும் அறபு - இஸ்லாமிய பல்கலைக்கழகங்களில் உயர்கல்வி கற்கச் சென்றோர் மூலம் அறபு இஸ்லாமிய நாடுகளுடனான தொடர்புகள் வலுவடைந்துள்ளன.
அந்த வகையில் எமது ஆய்வுப் பிரதேச பெண்களிடையே பல்வேறு வகையான பெஷன்களில் இந்த ஆடைப்பயன்பாடு உள்ளது. டுபாய், சவூதி, கட்டார் போன்ற நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் மொடல்களுக்கான விலை அதிகமாக உள்ளது. அவற்றின் விலைகளும் தரத்திற்கேற்ப வேறுபடுகின்றன. எமது ஆய்வுப் பிரதேசத்தில் ஒரு ஹபாயா 2500 ரூபாவிலிருந்து 10,000 வரைக்கும் விற்பனை செய்யப்படுவதாக இனங்கானப்பட்டுள்ளது. இவற்றில் அதிகமானவை கண்ணைக் கவரும் வண்ண வேலைப்பாடுகளுடனும் மற்றும் அதிக அலங்காரங்களுடனும் தயாரிக்கப்படுகின்றன.

இன்னும் எமது ஆய்வுப் பிரதேசத்தில் வெளியே செல்லும் பெண்கள் ஹபாயாவுடன் தங்களது தலையை மறைப்பதற்கு பர்தா, ஈரான் பர்தா, ஸ்காப் போன்றவற்றையும் இன்னும் சிலர் மறைக்க வேண்டியவற்றை முறையாக மறைக்க முடியாதவாறு குட்டையான ஷோல்களையும் பயன்படுத்துகின்றனர். அதுமட்டுமல்லாது ஷோல்களை சுற்றும் போது தங்களது தலைமுடிகளை ஒட்டகத்தின் திமில்கள் போன்று உயர்த்தியும் கட்டுகின்றனர். இவ்வாறு அரைகுறையாக ஆடை அணியும் பெண்களை இஸ்லாம் எச்சரிக்கின்றது. “ இரு பிரிவினர் நரகவாசிகள் ஆவர். அவர்களை நான் கண்டதில்லை. (அவர்களுல்) ஒரு சாரார் மாட்டின் வாலைப் போன்ற சாட்டைகளை வைத்திருப்பர், அவற்றைக் கொண்டு மக்களை அவர்கள் அடிப்பர். மறுசாரார் உடை அணிந்த நிலையில் நிர்வாணமாக இருக்கும் பெண்களாவர். அவர்கள் தீய வழியில் செல்வதுடன் பிறரையும் தீயவழியில் செலுத்துவர். அவர்களின் தலைகள் ஆடி அசையும் ஒட்டகங்களின் திமில்களைப் போன்று காணப்படும். இத்தகையவர்கள் சுவனம் நுழையமாட்டார்கள். அதன் வாடையைக கூட நுகரமாட்டார்கள். (முஸ்லிம்)

சமீப காலத்தில் முஸ்லிம் பெண்கள் அணியும் இந்த ஹபாயா குறித்து சில விமர்சனங்களும் எழுந்துள்ளன. அந்தவகையில் எமது ஆய்வுப் பிரதேசத்திலும் கூட சில பெண்கள் அணியும் ஹபாயாக்கள் அவற்றின் நோக்கத்தை நிறைவு செய்யவில்லை, எனவும் இடம், தானத்திற்கேற்ப தங்களது ஹபாயாக்களை அணியாது எல்லா இடங்களிற்கும் மிகக் கவர்ச்சியான ஹபாயாக்களை அணிவதாகவும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்னொரு பக்கம் எமது ஆய்வுப் பிரதேசத்திற்குட்பட்ட பெண்களில் அதிகமானோர் கறுப்பு ஹபாயாக்களையே அணிகின்றனர். எமது நாட்டின் தற்போதைய சூழலைக் கருத்திற் கொண்டு, படிப்படியாக கறுப்பு நிறத்திலிருந்து வேறு நிற ஹபாயாக்களுக்கு மாற வேண்டும். அதுமட்டுமல்லாது எமது ஆய்வுப் பிரதேசம் அதிக உஷ்னமாகக் காணப்படுவதால் கறுப்பு நிறத்தை விட வேறு நிற ஹபாயாக்களை அணிவது எமக்கேற்படக் கூடிய சில நோய்களிலிருந்து எம்மைப் பாதுகாக்கக் கூடியதாய் அமையும். அதுமட்டுமல்லாது அண்மைக் கால தாக்குதலின் பின் வேலைக்குச் செல்லும் முஸ்லிம் பெண்களது ஆடைக்கலாச்சாரம் தொடர்பாக பல்வேறுபட்ட வாதப்பிரதிதாதங்கள், பிரசச்சினைகள் மற்றம் தவறான புரிதல்கள் போன்றவற்றால் சந்தித்த இன்னல்களையும் சங்கடங்களையும் கருத்திற் கொண்டு எமது ஆடைப் பயன்பாட்டை அமைத்துக் கொள்ள வேண்டும்.

## 4. துக்ககரமான நிகழ்வுகள்ன் போதான ஆடைக்கலாச்சாரம் :-

எமது ஆய்வுப் பிரதேசத்தில் துக்ககரமான நிகழ்வுகளின் போது, ஹபாயா அணியும் பெண்கள் மிக எளிமையான கறுப்பு நிற ஹபாயாக்களையும் அவ்வாறே சேலை அணிவோர் எளிமையான வெள்ளை நிற சேலைகளையும் அணிவதாக இனங்காணப்பட்டுள்ளது. இதற்கும் மாற்றமாக, சில பெண்கள் கவர்ச்சியான ஆடைகளை துக்ககரமான நிகழ்வுகளின் போதும் அணிவோர் இல்லாமலும் இல்லை.

## முடிவுரைகளும் பரிந்துரைகளும் (Conclusion & Recommendation )

### முடிவுரை :-

அல்லாஹ் அழகையும் சுத்தத்தையும் விரும்புகின்றான். அதற்காக தன் அழகை பிற ஆண்கள் மத்தியில் காட்டுமாறு இஸ்லாம் கூறவில்லை. மாறாக ஒரு பெண் தன் கணவனிடத்திலேயே தன் அழகை வெளிக்காட்ட வேண்டும் என இஸ்லாம் மார்க்கம் கூறுகின்றது. ஆனால் இவ் ஆய்வின் பெறுபேறுகளுக்கு அமைய இன்று நம் பெண்கள், வீட்டில் அலங்கோலமாகவும் வெளியில் செல்லும் போது தன்னை அலங்கரித்துக் கொண்டும் வாசனைத் திரவியங்களை பூசிக் கொண்டும் செல்வதாக இனங்கானப்பட்டுள்ளது. அவ்வாறே, இஸ்லாமிய ஆடை எப்போதும் ஒரே மாதிரியாகவே அமைய வேண்டும். ஆனால் இஸ்லாமிய ஆடையாக இருக்கும் ஹபாயா, பர்தா காலம் செல்லச் செல்ல அதுவும் மாறிக் கொண்டே செல்கிறது. இன்று அதனை இலகுவிற்காகவும், பெஷனிற்காகவும் அணிவதாகவே புலப்படுகின்றது. இவ்வாறாக பெண்களின் ஒழுங்கற்ற நடத்தைகளால் இன்றைய காலத்தில் அதிகமான பிரச்சினைகளும், குடும்ப சிதைவுகளும் ஏற்படுவதை எம்மால் இனங்காணக்கூடியதாக உள்ளது.

இதனடிப்படையில், சம்மாந்துறைப் பிரதேசத்தில் முஸ்லிம் பெண்களிடம் காணப்படுகின்ற ஆடைக்கலாச்சாரத்தில் மார்க்கத்தின் பின்பற்றல் குறைந்தளவிலேயே காணப்படுகின்றது. எனவே தான் இவற்றிலிருந்து இவர்களை மீட்டு இஸ்லாமிய ஆடைபற்றிய தெளிவினையும், மாற்றத்தினையும் உருவாக்குவதற்கு பரிந்துரைக்கப்பட்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் எதிர்காலத்தில் இஸ்லாமிய வரையறைகளை பேணிய அடிப்படையில் தங்கள் ஆடைக்கலாச்சாரத்தைப் பேணிக்கொள்ளும் முஸ்லிம் பெண்கள் சமுதாயத்தை அவதானிக்கலாம் என்பது புலனாகின்றது.

### பரிந்துரைகள் :-

எமது ஆய்வின் அடிப்படையில், முஸ்லிம் பெண்களின் ஆடைக்கலாச்சாரத்தில் பின்வரும் விடயங்களை கவனத்திற்கொள்வதனூடாக அவற்றை இஸ்லாமியமயப்படுத்த முடியும்.

1. முஸ்லிம் மகளிர்க்குப் பொருத்தமான தளர்வான ஆடைகளை வடிவமைத்து சந்தைப்படுத்தக்கூடிய தொழில் முனைவர்களை உருவாக்கல்.
2. சிறு வயதிலிருந்தே இஸ்லாமிய சூழலில் பெண் பிள்ளைகளை வளர்த்தல்.
3. பெற்றோர்கள், சகோதரர்கள் போன்றோர் தங்களது வீட்டுப் பெண்பிள்ளைகளின் ஆடைக் கலாச்சாரத்தில் கண்ணும் கருத்துமாக இருத்தல்.
4. இஸ்லாமிய முறையில் ஆடை அணிவதன் தேவை, நன்மைகள், பயன்களை எடுத்துக் கூறி அவற்றின் பால் ஆசையூட்டல்.
5. பெண் பிள்ளைகளுக்கு தங்களது ஆடை பற்றிய இஸ்லாமிய வரையறைகளை தெளிவுபடுத்தல்.
6. இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரத்தை மீறுவதால் எவ்வாறான விளைவுகள் ஏற்படும் என்பதை எத்தி வைத்தல், ஆடைக்கலாச்சாரம் தொடர்பான அறிவுரை நிகழ்வினை அடிக்கடி நிகழ்த்துதல்.
7. முஸ்லிம் பெண்களது ஆடை நெறிமுறைகளுடன் தொடர்புடைய அல்குர்ஆன் வசனங்கள், மற்றும் ஹதீஸ்களை அதனது விளக்கவுரைகளுடன் தொகுத்து விநியோகித்தல்.

### உசாத்துணைகள் :-

1. அல்குர்ஆன்
2. அல்ஹதீஸ்
3. ***இஸ்லாம் விரும்பும் பெண்ணின் ஆடை***, Muslim women's online learning centre. Retrived from www.womanofislam.coms

4. அலி, ஐ.்.பர், (2008), ***"பெண்கள் சிறிய, மெல்லிய இறுக்கமான ஆடை அணிதல்",*** Retrived from www.islamkalvi.com
5. ***ஆடைகளைத் தேர்ந்தெடுத்தல்,*** தமிழ் நாடு அரச பாடப்புத்தகங்கள்.
6. ***கலாச்சார உடை,*** Retrived from naanjilthamizh.wordpress.com
7. ரிஸ்மியா, ஹலீம், (2011 December ), ***சீரழிந்து வரும் நமது முஸ்லிம் பெண்களின் ஆடைக் கலாச்சாரம்.***
8. ***ஆடை அணிய சில டிப்ஸ்,*** (2019 February), மித்திரன்.
9. ஸெய்ன், ரவூப், (2018). ***முஸ்லிம்களின் கலாசார சமூகவியலும் ஆடை மரபுகளும்,*** மீள்பார்வை.
10. அகார், (2008 October ), ***பெண்களின் ஆடை,*** Retrived from www.sheikhagar.org
11. Kashifi, Yousuf. (2013 December). ***ஆடை அணிவது பற்றி இஸ்லாம் என்ன கூறுகிறது,*** Retrived from yousufkashifi.blogspot.com
12. ***முஸ்லிம் பெண்களின் ஆடை: அபாயாவுக்கென்றொரு புனிதமில்லை,*** ( 2018), செயலாளர் - திறந்த உரையாடலுக்கான அழைப்பு, மீள்பார்வை.
13. இனாமுல்லாஹ், மஸீஹ்தீன். (2016 September). ***முஸ்லிம் மாதர்களின் ஆடைகள்: வரைமுறைகள்.***
14. ***சம்மாந்துறையின் குடிகள்,*** குடிகள் பற்றிய ஆய்வு.
15. ஷிஹானா, ஜீ. (2010 February), ***இஸ்லாமிய பெண்ணும் ஆடையும்,*** *உண்மைஉதயம்.*
16. ஜெஸீல், ஜே. எம்., சப்றா, எம். ஏ., மர்ஸபா,ஏ.ஐ.எப்., ஹப்றாஸ், ஏ.எச். (2018). ***இஸ்லாமிய ஆடைக்கலாச்சாரமும் முஸ்லிம் இளம் பெண்களின் இன்றைய நிலையும்: அக்கரைப்பற்று மாநகரசபையினை மையப்படுத்திய ஆய்வு,*** Research submitted to 5th International Sysmposium of Faculty of Islamic Studies and Arabic Language.